கலைஞர் 100
1924 - 2023

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023


**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23.02.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "ஆற்றல் பயிர்களை இலக்காக்குதல் – உணவு ஆற்றல் இணைப்பு" பயிலரங்கம்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் ஆக்சியோம் (AXIOM) குழுமம், இணைந்து "ஆற்றல் பயிர்களை இலக்காக்குதல் - உணவு ஆற்றல் இணைப்பு" பயிலரங்கத்தினை 22.02.2024 அன்று இராசி விதை அரங்கத்தில் சிறப்பாக நடத்தியது. இந்நிகழ்ச்சியில் , இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் விஞ்ஞானிகள் , கேரளஅரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் உயரதிகாரிகள் , ஆக்சியோம் உறுப்பினர்கள் ,தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியின் போது , வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் அ .ரவிராஜ் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். அவர் புதுப்பிக்கவல்ல ஆற்றல் துறையின் சிறப்பம்சங்கள், செயல்பாடுகள் மற்றும் உயிரி ஆற்றல் குறித்த ஆராய்ச்சிகள் பற்றி கூறினார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் , முனைவர் வெ .கீதாலட்சுமி அவர்கள் பயிலரங்கத்தைத் துவக்கி வைத்து பயிலரங்கத்தின் கருப்பொருளான உணவு உற்பத்தி மற்றும் ஆற்றல் அமைப்புகளுக்கு இடையேயான தொடர்புகளை எடுத்துரைத்தார். மேலும் , அவர் இந்திய ஆற்றல் நிலையிலும் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைப்பதிலும் உயிரி எரிபொருள் மற்றும் ஆற்றல் பயிர்களின் (சோளம், கரும்பு, கம்பு நேப்பியர் , பனை மற்றும் பிற விவசாயக்கழிவுகள்) பங்கு குறித்து விவரித்தார்.

திரு. G.V. சங்கர், இயக்குநர், ஆக்சியோம் இந்தியா பிரைவேட் லிமிடெட் , அவர்கள் உயிரி எரிபொருள் , ஹைட்ரஜன், எரிபொருள் மின்கலம் மற்றும் நீர் மேலாண்மை ஆகிய களங்களில் தன் பங்கு பற்றி விளக்கினார். திரு.K.R.ஜோதிலால், கூடுதல் தலைமைச் செயலாளர் , (MoE, GoK), திரு.நரேந்திரநாத், தலைமை நிர்வாக அதிகாரி, (ANERT, GoK), முனைவர் ரவிகேசவன் , தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையம் , தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முனைவர் ரபி, முதன்மை விஞ்ஞானி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம் , முனைவர் நவ்தீப் டூர் , தலைமை இயக்க அதிகாரி , ஆக்சியோம், முனைவர் ஹேமபிரபா , இயக்குநர் (கரும்பு ஆராய்ச்சி நிலையம்), முனைவர் வெங்கடேஷ் மேடா, சஸ்காட்சுவான் (Saskatchewan) பல்கலைக்கழகம், கனடா, முனைவர் பட்டேல் , முன்னாள் இயக்குநர் , IARI ஆகியோர் இப்பயிலரங்கத்தின் சிறப்புரையாளர்களாக பங்கேற்றனர். அவர்கள் அனைவரும் உயிர் ஆற்றல் , ஆற்றல் பயிர்களின் மரபியல் அம்சங்கள் மற்றும் அதன் ஆராய்ச்சிகளை விரிவாக எடுத்துரைத்தனர். பயிர் விளைச்சலை மேம்படுத்துதல், அறுவடைக்கு முந்தைய மற்றும் பிந்தைய மேலாண்மை , மண் ஆரோக்கியம் மற்றும் அதன் நிலத்தன்மை ஆகியவற்றினை மேற்கோள்காட்டி பயிலரங்கத்தினை சிறப்பித்தனர். திரு.சுதர்சன் சூரியவன்ஷி , ஆக்சியோம், அவர்களின் நன்றியுரையுடன் பயிலரங்கம் இனிதாக நிறைவு பெற்றது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**